

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு தை மாதம் மாதம் 19 ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**அதிகாரம் : அறன் வலியுறுத்தல் - குறள் எண் : 35**

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

**குறள் விளக்கம்**

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடித்து ஒழுகுவதே அறமாகும்.

பழமொழி ( Proverb )

***Many hands make work light***

**கூடி வந்தால் கோடி நன்மை**

பொன்மொழி

ஊக்கத்தை கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு

-அறிஞர் அண்ணா

இரண்டொழுக்க உறுதி மொழி

1. பொய்யுரைத்தலால் புகழும் கெடும் எனவே ஒரு போதும் பொய் கூற மாட்டேன்
2. சோம்பலினால் வளர்ச்சி கெடும், எனவே எப்போதும் சுறு சுறுப்பாய் ஊக்கத்துடன் செயல்படுவேன்.

இன்றைய பொது அறிவு வினா விடை

1. இந்தியாவில் ஆப்பிள் மாநிலம் என அழைக்கப்படும் மாநிலம் – ஹிமாச்சல பிரதேசம்
2. இந்தியாவின் தேயிலைத் தோட்டம் என அழைக்கப்படும் மாநிலம் – அஸ்ஸாம்



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

*The School is clean.*

பள்ளி சுத்தமாக இருக்கிறது.

*Wear Mask Properly*

முகக்கவசத்தை முறையாக அணியுங்கள்.

### வரலாற்றில் இன்று

இந்திய கடலோர காவல் படை தினம்.

### இன்றைய செய்திகள்

- நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 1,650 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 19,280 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.
- வள்ளுவரின் 'கற்க கசடற' எனும் குறளுக்கு இணங்க கல்வி கொள்கை வகுக்கப்பட்டுள்ளது என கூறி நாடாளுமன்றத்தில் திருக்குறளை மேற்கோள்காட்டி ஜனாதிபதி உரையாற்றினார்.
- அரியலூர் மாணவி லாவண்யா தற்கொலை செய்துகொண்ட வழக்கை சிபிஐ-க்கு மாற்றி ஐகோர்ட் மதுரை கிளை அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.
- நாட்டின் பொருளாதாரம் 2023ஆம் நிதியாண்டில் 8 முதல் 8.5 சதவீதம் வரையில் வளர்ச்சி அடையும் என பொருளாதார ஆய்வறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது.
- தமிழகத்தில் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கு திருத்தப்பட்ட புதிய அட்டவணையை தேர்வுத்துறை இன்று வெளியிட்டுள்ளது.
- சென்னை மெரினா கடற்கரைக்கு இன்று முதல் பொதுமக்கள் செல்ல அனுமதி அளிக்கப்படுகிறது என மாநகராட்சி தெரிவித்துள்ளது.